DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 751/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW1 as PW1 | | | |
| Name | : | சித்திரைவேல் | Age | : | 33 |
| S/o | : | ராமைய்யா | Occupation | : | மேளம் வாசிக்கும் தொழில் |
| Village | : | சேதுநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of February 2026.

**27.02.2026**

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் சேதுநகரில் குடியிருந்து கொண்டு மேளம் அடிக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2ம் எதிரி 1ம் எதிரியின் மச்சான் ஆவார். அவர்கள் எனது தெருவில் வசித்து வருகிறார்கள். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டின் முன்பு சிறிய பிரச்சனை ஏற்பட்டது. நான் தடுமாறி கீழே விழுந்துவிட்டேன். எனது இடது கையில் காயம் ஏற்பட்டது நான் சிகிச்சையில் சேர்ந்தேன். பின்பு காவல்நிலையம் சென்ற போது போலீசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(புகார் மனுவில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 20.04.2023ம் தேதி 05.00 மணியளவில் எனது வீட்டின் முன்பாக நின்றுகொண்டிருந்தபோது குடும்ப பிரச்சனை காரணமாக ஆஜர் 1ம் எதிரி மற்றும் அவரது மைத்துனர் 2ம் எதிரி சமயமுத்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றாலும், அப்போது 2ம் எதிரி கட்டையால் எனது வலது கையில் அடித்து வீக்கக்காயமும், 1ம் எதிரி கையால் அடித்து ஊமைக்காயமும் ஏற்படுத்தினார்கள் என்றாலும், கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. அப்போது எனது மனைவி காளீஸ்வரி மற்றும்

முருகேஸ்வரி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தனியார் மருத்துவமனைக்கு சென்று கட்டுபோட்டுவிட்டு மறுநாள் புகார் மனு கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாணை – இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.02.27 20:19:52 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 751/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW3 as PW2 | | | |
| Name | : | முருகேஸ்வரி | Age | : | 39 |
| W/o | : | மாரி | Occupation | : | குடிசைத்தொழில் |
| Village | : | சேதுநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of February 2026.

**27.02.2026**

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் சேதுநகரில் குடியிருந்து கொண்டு குடிசைத்தொழில் செய்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 20.04.2023ம் தேதி 05.00 மணியளவில் எனது வீட்டின் அருகில் சித்திரை வேல் என்பவர் நின்றுகொண்டிருந்தபோது குடும்ப பிரச்சனை காரணமாக ஆஜர் 1ம் எதிரி மற்றும் அவரது மைத்துனர் 2ம் எதிரி சமயமுத்து அவரை தகாத வார்த்தைகளால் திட்டினார்கள் என்றாலும், அப்போது 2ம் எதிரி கட்டையால் அ.சா.1யை வலது கையில் அடித்து வீக்கக்காயமும், 1ம் எதிரி கையால் அடித்து ஊமைக்காயமும் ஏற்படுத்தினார்கள் என்றாலும், கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. அப்போது அ.சா.1ன் மனைவி காளீஸ்வரி மற்றும் நான் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாணை – இல்லை**

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.02.27 20:20:02 +0530

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 751/2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | LW4 as PW3 | | | |
| Name | : | பழனிவேல் | Age | : | 23 |
| S/o | : | கணேசன் | Occupation | : | மேளகாரர் |
| Village | : | சேதுநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 27th day of February 2026.

**27.02.2026**

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை நான் கேணிக்கரை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். பார்வைமகஜரில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **(பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 21.04.2024ம் தேதி 19.00 மணியளவில் நானும், பொன்னுச்சாமி என்பவரும் எங்கள் தெருவில் நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த கேணிக்கரை காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வைமகஜரில் நானும், எனது பொன்னுச்சாமி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறுவிசாணை – இல்லை**

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.02.27 20:20:08 +0530